# இந்திய அரசியலமைப்பின் முகவுரை

- முகவுரை என்பது இயற்றப்பட்ட சட்டத்தை அறிமுகம் செய்து வைக்கும் பகுதியாகும்.
- முகவுரை அரசியலமைப்பின் தொகுப்பாகவும் அதன் சாரமாகவும் உள்ளது.
- இந்திய அரசியலமைப்பின் முகப்புரை, பண்டித ஜவஹர்லால் நேருவால் டிசம்பர், 13 1946-ல் முன்மொழியப்பட்டு, ஜனவரி 22, 1947-இல் அரசியல் நிர்ணய சபையால் ஏற்றுக் கொள்ளப்பட்ட 'குறிக்கோள் தீர்மானத்தை' அடிப்படையாகக் கொண்டு எடுத்தாளப் பெற்ற ஒன்றாகும்.
- இந்திய அரசியலமைப்பு முகவுரையைக் கொண்டே தொடங்குகிறது.
- அமெரிக்க அரசியலமைப்புச் சட்டமே முதன் முதலில் முகப்புரையைக் கொண்டு தொடங்கியது.

## முகவுரை

இந்திய மக்களாகிய நாம், இந்தியாவை ஒரு இறையாண்மை வாய்ந்த, சமதர்ம நெறி சார்ந்த, மதச்சார்பற்ற, மக்களாட்சிக் குடியரசாக அமைக்கவும், அதன் குடிமக்கள் அனைவருக்கும்

- சமுதாய, பொருளாதார மற்றும் அரசியல் நீதியும்,
- சிந்தனை வெளிப்பாட்டில் நம்பிக்கையும், பற்றார்வத்தில் மற்றும் வழிபாட்டில் சுதந்திரமும்,
- தகுதி நிலையில் மற்றும் வாய்ப்பில் சமத்துவமும்,
- உறுதியாகக் கிடைக்கச் செய்யவும், தனி ஒருவரின் மாண்புக்கும், நாட்டின் ஒற்றுமைக்கும், ஒருமைப்பாட்டிக்கும் உறுதியளிக்கும் உடன் பிறப்புணர்வை அவர்கள் அனைவரிடையே வளர்க்கவும், விழுமிய முறைமையுடன் உறுதி பூண்டு,
- 1949, நவம்பர் இருபத்து ஆறாம் நாளாகிய இன்று நம்முடைய அரசியலைப்புக் பேரவையில்,ஈங்கிதனால், இந்திய அரசியலமைப்பை ஏற்று, சட்டமாக இயற்றி, நமக்கு நாமே வழங்கிக் கொள்கிறோம்.

## முகவுரையின் முக்கிய கலைச் சொற்கள்

- Sovereign - இறையாண்மை – முழுவதும் தன்னிச்சையாக செயல்படும் தன்மை, யாருக்கும் உட்படாத தன்மை; மேலும் இதற்கு மேல் உயர்ந்த அமைப்பு இல்லை.
- Socialist – சமதர்மம் - இவ்வாசகம் 1976-ஆம் ஆண்டு 42-வது அரசியலமைப்பு சட்ட திருத்தம் வாயிலாக அரசியலமைப்பில் சேர்க்கப்பட்டது.
- Secular – மதச்சார்பின்மை – 42-ஆவது சட்டத் திருத்தம் (1976) மூலம் முகவுரையில் சேர்க்கப்பட்டது. (பிரிவு 25 – 28)
- Democratic – மக்களாட்சி – மார்க்சியம் மற்றும் காந்திய சமதர்ம கொள்கைகளை கொண்டது.
- Justice – நீதி – சமூக, பொருளாதார மற்றும் அரசியல் - நீதி
- Liberty – உரிமை, சுதந்திரம் - சிந்தனை, சிந்தனை வெளிப்பாடு, நம்பிக்கை, பற்றார்வம் மற்றும் வழிபாடு
- Equality – சமத்துவம் - தகுதி நிலையில் மற்றும் வாய்ப்பில்
- Fraternity – சகோததரத்துவம் - தனி ஒருவரின் மாண்பிற்கும், நாட்டின் ஒற்றுமைக்கும்.

## முகவுரையின் முக்கியத்துவம்

- அரசியலமைப்புச் சட்டத்தை இயற்றியவர்கள் எந்நோக்கத்திற்காக அதனை இயற்றினார்கள், அதன் மூலம் அடைய விரும்புகிற அரசியல், சமுதாய மற்றும் பொருளாதார சூழல்கள் பற்றிய குறிப்புகளை முகவுரை பகிர்கிறது.
- N.A. பால்கிவாலா- அரசியலமைப்பின் அடையாள அட்டை

- K.M. முன்ஷி – நம் இறையாண்மையுடைய மக்களாட்சிக் குடியரசின் ஜாதகம்.
- சர் அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர் – எங்கள் நீண்ட நாள் சிந்தமையும் கனவையும் உள்ளடக்கியது.

### அரசியலமைப்பின் ஒரு பகுதி – முகவுரை

- அரசியலமைப்பு வரலாற்றில் முகவுரை அரசியலமைப்பின் ஒரு பகுதியா என்பது குறித்த சிக்கல்கள் எழுந்தன.
- பெரும்வாரி வழக்கில் (1960), உச்சநீதிமன்றம், முகவுரை, அரசிலமைப்பின் பகுதி அல்ல என்று தீர்ப்பளித்தது.
- ஆனால் பின்னால் வந்த கேசவனந்த பாரதி வழக்கில் (1973), முகவுரை அரசியலமைப்பின் ஒரு பகுதியே என்று தீர்ப்பளித்தது.
- பின்னால் நடந்த எல்.ஐ.சி. வழக்கிலும் (1995) இதே தீர்ப்பு கூறப்பட்டுள்ளது.
- அரசியல் நிர்ணய சபையின் தலைவரும் இதே கருத்தைக் கூறியுள்ளது குறிப்பிடத்தக்கது.

### ஆனால் இரண்டு விஷயங்கள் குறிப்படத்தக்கன

- முகவுரை சட்டமியற்றுவதற்கான அதிகார மூலம் அல்ல; மேலும், சட்டமியற்றுவதை தடை செய்யும் சாரத்தையும் உள்ளடக்கியதல்ல.
- இது நீதி மன்றங்கள் மூலம் நிறைவேற்றப்படக்கூடிய சட்டம் அல்ல.

### முகவுரையும் சட்டத்திருத்தமும்

- கேசவானந்த பாரதி வழக்கில் (1973) முகவுரையை திருத்தம் செய்ய முடியுமா என்ற கேள்வி எழுந்தது.
- உச்சநீதிமன்றம் முகவுரையை திருத்தம் செய்ய முடியுமென்றும், மேலும் அவ்வாறு திருத்தம் செய்கையில் அரசியலமைப்பின் 'அடிப்படைக் கூறுகளுக்கு (basic features) பாதகம் இல்லாமல் இருக்க வேண்டும் என்றும் கூறியது.
- இதைப் பின்பற்றி 1976-ஆம் ஆண்டு 42-ஆவது சட்டத் திருத்தம்,''சமதர்மம், சமயசார்பற்ற மற்றும் ஒருமைப்பாடு'' ஆகிய மூன்று சொற்களை முகவுரையில் சேர்த்தது.

Whatsapp குரூபில் சேர - கிளிக் செய்யவும்

Telegram Channel ல் சேர - கிளிக் செய்யவும்